ரூ. 14,000-க்குள் அடக்கப்படுகிறது. ஆகவே, அம்மாதிரி சிறிய டிராக்டர்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைத்து விவசாயிகளுக்குக் கொடுப்பது பற்றி அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : உதகையிலே இருக்கிற ஜி.டி.ஆர். தொடர்புடன் நாம் நடத்துகிற உருளைக் கிழங்கு சாகுபடிக்காக, அவர்கள் சொந்தத்திற்கு, அவர்கள் விருப்பப்படி டிராக்டரைக் கொண்டுவந்து பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் ஜி.டி.ஆர். அரசாங்கத்தை 100 டிராக்டர்கள் வேண்டும் என்று கேட்டிருக்கிறது. இதுவரை ஒன்று கூட அவர்கள் அரசுக்குக் கொடுக்கவில்லை.

திரு. ஆ. துரையரசன் : அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக தஞ்சை மாவட்டத்திற்கு இதுவரையில் டிராக்டர்கள் ஏதாவது வழங்கப்பட்டிருக்கின்றனவா ? அப்படி என்றால் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாவட்ட ரீதியாக எவ்வளவு டிராக்டர்கள் வழங்கப்பட்டன என்கின்ற குறிப்பு இப்பொழுது இல்லை. கேட்கப்பட்ட கேள்வி வெளிநாடுகளிலிருந்து டிராக்டர்ஸ் வரவழைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா, ஆமெனில் எந்த நாடுகளிலிருந்து என்பதுதான். எனவே, தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய பதிலை தயாரித்துத் தர முடியும்.

திரு. என். ராஜாங்கம் : வெளி நாடுகளிலிருந்து டிராக்டர்கள் வரவழைக்க மத்திய கார்ப்பரேஷன் வேலை செய்வதுபோல, அக்ரோ இண்டஸ்டிரிஸ் கார்ப்பரேஷனுக்கு அந்த உரிமை கொடுக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனுக்குத் தான் அந்த உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு எந்த கார்ப்பரேஷனுக்கும் அந்த உரிமை கொடுக்கப்படவில்லை. மத்திய அரசு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக இவைகளையெல்லாம் தருவித்து, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக அந்த மாநிலத்திலுள்ள மக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருக்கிறது. தனிப்பட்ட முறையில் வேறு எந்த கார்ப்பரேஷனும் இதில் ஈடுபடவில்லை.

கொடைக்கானலுக்கு சுற்றுலா மாளிகை

*277. **வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்தியதர வகுப்பினர் கொடைக்கானலில் தங்க விடுதி கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1970 மார்ச் 9]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஒரு சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் உள்ளது.

(இ) கொடைக்கானலிலுள்ள, 'அம்மனடி', 'சிவனடி', 'அகிலாண்ட விலாஸ்' என்ற இடங்களையும் அவற்றிலுள்ள கட்டடங்களோடு கையெடுப்பு செய்து பின் அவற்றிற்குத் தேவையான மாறுதல்களை செய்து ஒரு சுற்றுலா மாளிகையாக மாற்றும் உத்தேசம் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும்? எத்தனை பேர்கள் அந்த மாளிகையில் தங்கலாம்? இந்தத் திட்டம் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த மாளிகை கட்டுவதற்காக சுமார் ரூ. 1,75,000 தொகையை இந்தத் துறை ஒதுக்கியிருக்கிறது. கட்டடத் துறை தலைமைப் பொறியாளரை தேவைப்படும் பணிகளுக்கான வரைபடம், செலவு மதிப்பீடு தயாரிக்குமாறு அரசு கேட்டுள்ளது. நிலத்திற்கான ஈட்டுத் தொகை ரூ. 1.75 லட்சம் ஆகலாம் என்று தோன்றுகிறது. மு ப. 9-20

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, கொடைக்கானலில் இப்படிக் கட்டும் போது, போக்குவரத்து அதிகமாகி சமாளிக்க முடியாத நிலை ஏற்படலாம். ஆகவே, ஒரு ரெயில் பாதை அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ரெயில்வே பற்றி தனியாக சம்மந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்கவேண்டும்.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, கொடைக்கானலில் புதிதாகக் கட்டடம் கட்ட வேண்டும் என்றால் ஏராளமான செலவு ஆகும். ஆகவே, பழைய கட்டிடங்களையே வாங்கி அவற்றை மராமத்து செய்து புதுப்பிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இங்கே தனியாக இடம் எடுத்துக் கட்டவேண்டும் என்று செயற்குறிப்பு இருக்கிறது. அதற்கு நிலத்திற்கு ஈட்டுத் தொகை ரூ. 1,75,000 என்று குறிப்பிட்டேன். பழைய கட்டடங்கள் பற்றி தகவல் இல்லை.

திரு. கே. விநாயகம் : சார், சமீபத்தில் கொடைக்கானல் மலையிலே குறிஞ்சி மலர் பூத்தது என்று சொல்லி . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியைப் பார்க்க வேண்டும்.

திரு. கே. விநாயகம் : கடைசியில் 'ரெஸ்ட் ஹவுஸ்'ல் வந்து நிற்பேன் பாருங்கள்! குறிஞ்சி மலர் வந்தது என்று பெரிய விளம்பரம் செய்யப்பட்டு, ஏராளமான மக்கள் கொடைக்

கானலுக்கு வந்து, கொடைக்கானலில் உள்ள மாளிகைகளில் தங்கி, கோஹினூர் மாளிகை, கவர்ன்மெண்ட் ரெஸ்ட் ஹவுஸ் இங்கெல்லாம் தங்கி அங்கு சென்ற கமிட்டிக் கூட்டங்களுக்கும், அங்கத்தினர் களுக்கும் இடம் இல்லாமல் பல சிக்கல்கள் ஏற்பட்டன என்பதால், மிடில் கிளாஸ் மக்களுக்குத் தங்கவென்று இந்த ரெஸ்ட் ஹவுசுகளை உடனடியாகக் கட்ட, இந்த ஆண்டிலேயே கட்டுவதற்கு ஏதாவது முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கொடைக்கானலில் குறிஞ்சி மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பூக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, 12 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் நெருக்கடியைப் பற்றிக்கவனிக்கலாம். (சிரிப்பு)

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, இது தவிர வேறு எங்கெங்கு விடுதிகள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது பூரணமாக பட்டியல் இல்லை, என்றாலும், இந்த ஆண்டு சிதம்பரம், காஞ்சி இன்னும் சில இடங்களில் கட்ட உத்தேசம். திருச்செந்தூரில், கன்யாகுமரியில் ஏற்கனவே கட்டடம் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கும் தறுவாயில் இருக்கின்றது.

Hotel Review and Survey Committee

* 278. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : **Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether any hotel in this State has received ranking by the Hotel Review and Survey Committee of the Union Government?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இந்த ஓட்டல்களுக்கு மத்திய சர்க்காரால் பண உதவி ஏராளமாக அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 24 ஓட்டல்கள் தரவாரியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கென்று மத்திய சர்க்காரால் தனியாக சர்வே செய்யப்படுவதற்காக சர்வே கமிட்டி போட்டு, அவர்கள் எல்லா மாநிலங்களையும் சுற்றிப் பார்த்து, ஓட்டல்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். 1, 2, 3, 4 ஸ்டார் ஓட்டல் என்கிற அடிப்படையில் தரம் பிரித்திருக்கிறார்கள். மிக உயர்ந்த ஓட்டலை 4 ஸ்டார் ஓட்டலாகப் பிரித்ததில் சென்னையில் கனிமாரா ஓட்டலையும், மதுரையில் பாண்டியன் ஓட்டலையும் நாலு-ஸ்டார் ஓட்டல்களாகப் பிரித்திருக்கிறார்கள். இன்னும் ஓட்டல் சவேரா (சென்னை), ஓட்டல் தாசபிரகாஷ் (சென்னை), ஓட்டல் விக்டோரியா (சென்னை), ஓட்டல் இம்பீரியல் (சென்னை), உட்லண்ட்ஸ் ஓட்டல்